[திரு. வே. செந்தில் பாலாஜி] [2008 ஏப்ரல் 29

அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகள் வந்தவுடன் அவர்களையும் அழைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் அங்கு ஆராயப்பட்டு, புதிய திருத்திய மதிப்பீடுதான் இன்றைக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது, பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களே வந்து நன்றி சொன்னார்கள். இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் மீண்டும் அந்தத் துறையின் சார்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2007–2008* ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் *93* முதல் *96* வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பிலே பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). *2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.